மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2022 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடித்திங்கள் 20 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.439/2021-ல்**

**அசல் வழக்கு எண். 162/2019**

மணிமேகலை, வயது 52, க/பெ.சிவசுப்பிரமணியன்,இந்து, விவசாய தொழில், கோவில் சித்தமல்லி கிராமம், நொச்சியூர் வருவாய் கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி. ...மனுதாரர் /வாதி

// **எதிர்**//

மாரிமுத்து, வயது 55 த/பெ. முருகையயன், இந்து, விவசாய தொழில், கதவு எண்.3/449A, மாரியம்மன் கோவில் தெரு, கோவில்சித்தமல்லி கிராமம், நொச்சியூர் வருவாய் கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி.

.....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணத்தினை வாதி தரப்பு கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 07.12.2021

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 10.12.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 10.12.2021 ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சூழ்நிலையில் கடந்த 28.07.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. ஜீவானந்தம்** அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. V. ரவிச்சந்திரன்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள்

பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று **05.08.2022** இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2022 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

S/d. **A.S.Ameerdheen,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)